நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**M.C. No. 14/2024**

**P.W. 1 –ன் வாக்குமூலம்**

**(மனுதாரர்தரப்பு சாட்சி )**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஸ்ரீநிதி |
| கணவர் பெயர் | : | ராகேஷ் |
| கிராமம் | : | கொளத்தூர் பேருந்து நிலையம் |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW 1** |
| வயது | : | 24 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 07–ம்ஆம் தேதி*** *பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜரில் இல்லை அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**குறுக்கு விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–03.56PM)

1. மேற்படி சார்பு நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த எ.சா.ஆ.1 மனுவில் 22 ஆவது பத்தியில் கடந்த 20.01.2024 ஆம் தேதி வழக்கறிஞர் தீபக் குமார் எனக்கு கொலை மிரட்டல் விடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். அது பற்றி இந்த மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அது குறித்து காவல் நிலையத்தில் நான் புகார் எதுவும் அளிக்கவில்லை. இதுவரை நான் புகார் எதுவும் அளிக்கவில்லை. உண்மையில் நான் சொன்னவாறு கொலை மிரட்டல் விடுத்திருந்தால் காவல் நிலையத்தில் நான் புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல.

2. இந்த வழக்கை மேற்படி விவாகரத்து மனுவை தாக்கல் செய்த பின்னிட்டு தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி விவாகரத்து மனு தாக்கல் செய்யப்பட்டு இருப்பது பற்றி இந்த மனுவில் நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதேபோல் HMOP 1/ 2024–ல் எனது கணவர் விவாகரத்து கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி எனது கணவர் தாக்கல் செய்த மனுவில் எனக்கு அறிவிப்பு வந்தது அந்த அறிவிப்பின் அடிப்படையில் நான் சேர்ந்து வாழ கோரி சார்பு நீதிமன்றத்தில் தனியாக மனு தாக்கல் செய்தேன்.

3. நான் பிஎஸ்சி கெமிஸ்ட்ரி படித்துள்ளேன்.நான் எனது அம்மா வீட்டில் தான் இருக்கிறேன். என்னுடைய கல்வி சான்றிதழ்கள் எனது கணவரிடம் இருப்பதால் நான் வேலைக்கு எதுவும் செல்வதில்லை. நான் சேலம் கல்யாண் ஜுவல்லரியில் பணிபுரிந்து வருகிறேன் என்றாலும் மாதம் 25 ஆயிரம் சம்பளமாக சம்பாதித்து வருகிறேன் என்றாலும் சரி அல்ல.

4. எனது திருமணத்திற்கு எனது வீட்டில் 15 பவுன் தங்க நகை போட்டார்கள். ம.சா.ஆ.7 அதில் இரண்டு பவுனுக்கு தான் ரசீது கொடுத்துள்ளோம் என்றால் சரிதான் அது எனது கணவருக்கு எனது பெற்றோர் போட்டது. எனக்கு போட்ட 15 பவுன் தங்க நகை சிறுவயதில் இருந்து சேர்த்து வைத்தது அதனால் அதற்கு ரசீது தாக்கல் செய்யவில்லை. நான் வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றாலும் உண்மையில் நான் சொன்னவாறு 15 பவுன் தங்க நகை போட்டு இருந்தால் அதற்கும் ரசீது தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியில்ல.

5. நான் சொன்னவாறு எனது பெற்றோர்கள் பீரோ கட்டில் உட்பட சீர்வரிசை பொருட்கள் எதுவும் வாங்கித் தரவில்லை என்றால் சரியில்ல. மேற்படி வாங்கித் தந்திருந்தால் அந்த ரசீதுகளை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியில்ல. எனது கணவர் எனக்கு தேவையான அனைத்து செலவுகளையும் செய்துள்ளார் என்றால் சரிதான். திருமணத்திற்கும் இரு தரப்பிலும் சரிபாதியாக செலவு செய்தோம் என்றால் சரிதான். எனது கணவரின் பெற்றோர்களுக்கான மருத்துவ செலவை எனது கணவர் செய்து வருகிறார் என்றால் அவர்கள் நோயாளிகள் அல்ல. எனது மாமனார் மாமியாருக்கு இரண்டு மகன்கள் உள்ளார்கள்.

6. எனது மனுவில் எனது கணவருக்கு உஷா நந்தினி என்பவருடன் தொடர்பு இருப்பதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அது குறித்து நான் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. உண்மையில் நான் சொன்னவாறு தொடர்பு வைத்திருந்தால் அதற்கான ஆவணங்களை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றால்

சரியில்ல. நான் வழக்குக்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

7. எனது அப்பாவும் மாமனாரும் 30 வருடங்களாக நண்பர்கள் என்றால் சரிதான். எனது மாமனார் மாமியார் வயதான நிலையில் வாடகை வீட்டில் தான் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. தற்போது அவர்கள் எங்கிருக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. ஆனால் சொந்த வீடு அவர்களுக்கு உள்ளது. நான் கேட்கும் அளவுக்கு எனது கணவரால் ஜீவனாம்சம் கொடுக்க முடியாது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:–04.23PM.

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/–நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**